உ. த. குரல் வழி நடத்தல் குழு:—

- பிரான்ஸ்: திரு. அரிமாவளங்கோ
- இந்தோனேசியா: திரு. ராமுலு
- பீசி: திரு. க. அப்பாப்பிள்ளை
- தென்னுபிரிக்கா: திரு. மு. அன்பன்
  திரு. அ. சோதிநாதன்
- தமிழ் நாடு: திரு. இளந்தமிழன்
- மொறிசியசு: திரு. அ. புட்பரதம்
- மலேசியா: திரு. நாரண,
  திரு. விடச்செல்வன்
- பர்மா: திரு. ரெ, மாரிமுத்து
- சிங்கப்பூர்: திரு. சி. இறைவாணன்

உலகத் தமிழர்களே ஒன்றுபடுக! ★ விலை சதம் 50

# உலகத் தமிழர் குரல்

குரல்: 2 | தி. பி. 2007 மாசித்திங்கள் – பெப்ரவரி 1976 | ஒலி: 7

ஆசிரியர்: குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்


# தென்னுபிரிக்காத் தமிழ் மாணவருக்கு தமிழ்ப்பாட நூல்கள் வேண்டும்

## தென்னுபிரிக்க பௌதத சங்கத்தலைவர் வேண்டுகோள்!

டர்பன், சனவரி, 20



தமிழ்த்திரு.
ல. நாகமுத்து அவர்கள்

"தென்னுபிரிக்காத் தமிழ்க் குழந்தைகளுக்கென அந்த நாட்டுச் சூழலை மைய மாக வைத்து தமிழ்ப் பாட நூல்கள் எழுதி வெளியிடப் பட வேண்டும் என்பது என் இறுதி ஆசை! இந்த புனிதப் பணிக்குத் தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள தமிழ் அறிஞர் பெருமக்கள் கை கொடுத்து உதவ வேண்டும். தென்னுபிரிக்காவில் தமிழ் மொழியை நிரந்தரமாக வாழ வைக்க வேண்டுமாயின் உடனடியாக இந்த நடவடிக்கையை நாம் மேற் கொள்ளவேண்டும்'' என உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார் தென்னுபிரிக்க பௌத்த சங்கத் தலைவர் தமிழ்த்திரு இலட்சுமணர் நாகமுத்து அவர்கள். தென்னுபிரிக்கா, டர்பினிலுள்ள, கிளேர்வூட் தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியராகத் தற்போது கடமையாற்றி வரும் திரு. நாகமுத்து அவர்கள், தென்னுபிரிக்க தமிழர் கூட்டிணைப்புக் கழகத்தின் உப தலைவராகவும், உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க, தென்னுபிரிக்காக் கிளையின் அமைப்பாளராகவும் இருந்து வருகிறார். திரு. நாகமுத்து அவர்கள் இலங்கையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மன்றமகாநாட்டின் பார்வையாளராக வந்து கலந்து கொண்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. நாகமுத்து அவர்களுடன் தொடர்பு கொண்டு உதவ விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

L. Nagamuthu,
7, Road 133, Havenside,
Chatsworth, Durban - 4001
SOUTH AFRICA.

## எமது கருத்து!

### உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா — ஒத்திவைப்பு

உலகத் தமிழ்ப் பண்பாட்டுப் பெரு விழா ஒத்தி வைக்கப் பட்டு விட்டது! கம்பனுக்கு விழா! வள்ளுவனுக்கு விழா கண்ணகிக்கு விழா எனப் பல்லாயிரம் விழாக்கள் பண்டிகைகள் கொண்டாடுவதில் முதல் நிற்பது உலகில் நம் தமிழ் இனமே ஆனுல்!!!

உலகத் தமிழர் ஒருங்கிணைவுக்கும், புரிந்துணர்வுக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஒரு மைல் கல்லாக அமையும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட ஒரே 'விழா' காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பது உலகத் தமிழர் நலனில் நாட்டம் கொண்ட அனைத்துலகத் தமிழர்களுக்கும் ஒரு பெரும் ஏமாற்றமாய் அமைந்து விட்டது. தமிழர் வாழும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் நமக்குக் கிடைத்துவரும் ஏராளமான கடிதங்கள் அவர்களின் இந்த ஏமாற்றத்தினைப் பிரதிபலிப்பனவாக அமைந்து வருகின்றன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## எமது அடுத்த இதழில்

* ''உலகத் தமிழர்களை இணைக்க, தமிழர் வாழும் நாடெல்லாம் 'தமிழர் திருநாள்' கொண்டாடுக''
  — மலேசிய தமிழ்த்திரு. வீரப்பன் செய்தி
* மேலை நாடுகளில் அருள் நெறியும் யோகக்கலையும் பரப்பி வரும் தமிழகத்து அருள் திரு, சிவலிங்கனுர்.
  — சேலம் யோகசபை இளந்தமிழன் கட்டுரை

**உலகத்தமிழா! நீ, உன் இனத்தில் பற்றிருந்தால் உலக அரங்கினிலே உன் குறையைப் பேச எழு. நிலவும் கொடுமையினை! நீதியின்முன்னே நிறுத்து! இன்றேகிளம்பு! இனிப்பொறுக்க நியாயமில்லை!**

# மொரீசியசில் எங்கள் தமிழர் தொடர் கட்டுரை

மொரீசியசில் வந்து குடியேறிய தமிழர்கள் எல்லாருமே கூலிகளாக இருந்து விடவில்லை. ஒரு சிலர் வணிகத்துறையிலும் ஈடுபட்டுப் பெரும் பொருளையும் ஈட்டினர். கடந்த ஐம்பதாண்டுகளுக்கு முன் இலட்சாதிபதியாக விளங்கியவர் திரு. கணபதிப்பிள்ளை. பலசரக்குகளை மொத்தமாக விற்கும் வணிகம். அக்காலத்தில் ஒரு கப்பலே இவரது வணிகப் பொருட்களை ஏற்றி வரும்! தொகையில் கால்பங்கினரான சீனர் வணிகத்துறையில் பெருமளவு முன்னணியிலுள்ளனர். சீனரும் முகமதியரும் இந்நாட்டின் மாபெரும் வணிகர்கள்.

இன்றைய தமிழரில் பெரும்பாலோர் கரும்புத்தோட்டங்களிலும், பண்ணைகளிலும், கரும்பாலைகளிலும் கூலிகளாகவும், பொறுப்பான பதவி வகிப்பவர்களாகவும் இருக்கிள்றனர். அரசாங்கவேலைகளிலும் பலர் பெரும் பதவிகளை வகித்து ஆண்டுகள் கழிந்து விட்டன. ஒரே ஒரு பெண், அதுவும் தமிழ்ப் பெண், லோர்பிள்ளை அம்மையார் நீதியரசியாக விளங்குகிறார். இந்நாட்டின் முன்னேற்றத்துக்கும் நல்வாழ்விற்கும் தமிழரும் பற்பல துறைகளில் ஈடுபட்டு உழைத்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

காட்சி, துணி தேய்க்கும் மின்கல் என்பன குறையாது இருக்க வேண்டும். பெரும்பாலோர் வேலைக்குச் செல்கையில் மேல்நாட்டு உடைகளையே அணிந்து செல்வர். இப்பழக்கம் இன்று நவீன இளைஞரால் எதிர்க்கப்பட்டு வருகிறது. திருமணகாலங்களில் மேலைநாட்டு உடை வாசனையே எங்கும் இருக்கும்.

## மொரீசியசின் பொருளாதாரத்தில் தமிழரின் சிறப்பான பங்கு !

இவர் முயற்சியால் அப்போது திங்கள் தோறும் தமிழ்ப்படங்கள் திரையிடப் பெறுவதுண்டு சொக்கலிங்கம் நாராயணன் பிள்ளை (என் மனைவியின் தந்தை) இரும்பு வணிகத்தில் ஈடுபட்டு, இந்து மகளிர் கல்லூரியைப் பிறரோடு சேர்ந்து நிறுவினார். தமிழ் ஈடுபாடு கொண்டவர். தமது சொத்தில் ஒரு பகுதியை இங்குள்ள பரோபகாரச் சங்கத்துக்கு அறக்கட்டளையாக்கி விட்டார். கடந்த 55 ஆண்டுக்ளாக அப்பாவு குடும்பத்தினர் வரும்போகும் கப்பல்களுக்கு உணவுப் பொருட்களை விற்கின்றனர்.



எய்கள் தமிழ்த் தரு.
அருணசலம் புட்பரதம்
(மொரீசியசு)

### தமிழர் வாழ்க்கை

இந்நாடு பிரஞ்சு ஆட்சியில் இருந்தமையால் இந்நாட்டு மக்களிடம் பிரஞ்சிய பண்பாடு பழக்க வழக்கங்கள் பெரிதும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இன்றைக்கும் எல்லா மக்களும் பொதுவாகப் பேசும் மொழி கிரியோலும் பிரஞ்சும் ஆகும். தமிழரும் இதற்கு விதி விலக்கன்று. மேலும் இன்றைய மேலை நாட்டு நாகரீகத் தாக்குதல் இருப்பதால் இளைஞர் மட்டுமின்றிப் பெரியவர்களும் நிலை தடுமாறித் திகைக்கின்றனர். பல இனத்தார் வாழும்

நெருங்கிய உறவினரையோ நெருங்கிய நண்பரையோ சந்திக்கும் போது பெண்டிர் கன்னத்தில் முத்தம் தருவர் சிறியோர் பெரியோருக்கு முத்தமிட வேண்டும். முத்தமிடா விடின் 'அநாகரீகம்' 'திமிர்' என்று சாடி விடுவார்கள். இந்த முத்தமிடுகல் முற்றிலும் பிரஞ்சிய பழக்கமாகும் எல்லோரும் ஒருவரையொருவர் சந்திக்கும் போது கை குலுக்குவார்கள். தமிழர்கள் முதலில் 'வணக்கம் சொல்லிப் பின் கை குலுக்குவார்கள் இப்போது கைகூப்பாமலே வணக்கம்சொல்லும் பண்பு பரவி வருகிறது.

(வளரும்)

## நீதியரசியாக ஒரு தமிழ்ப் பெண் - லோர் பிள்ளை அம்மையார்

அருப்புக் கோட்டையிலிருந்து குடியேறிய அங்கடி செட்டியார் நிறுவி, இன்று 'செட்டியார் துணிக்கடை' யாகப் பெருகி, அவர் மகனான வீரையா செட்டியார் பொறுப்பில் வணிகம் விரிவடைந்து வந்துள்ளது செட்டியார் கம்பெனி. விலையுயர்ந்த விளையாட்டுப் பொருட்களுக்கும் சுற்றுலாவினர் தேடும் நாட்டுக் கைவேலைப் பொருட்களுக்கும் கடைவைத்து வணிகம் வருகின்றனர். நிதி அமைச்சு, வெளியுறவு அமைச்சு, கல்வியமைச்சு போன்றவற்றில் சிலர் உயர் பதவியிலுள்ளனர். நகரக் காவல் துறையிளிலும் சிலர் பொறுப்புள்ள உயர் பதவியிலுள்ளனர். நீதித்துறையிலும் பலர் உயர் பதவியிலுள்ளனர். காலஞ்சென்ற வழக்குரைஞர் அரங்கநாதன் சீனிவாசன் இந்நாட்டு மக்களுக்கு அரியபல தொண்டுகள் புரிந்தவர். நாடு இது. கீழை நாட்டுப் பண்பாடும் மேலை நாட்டுப் பண்பாடும் சந்தித்து ஒன்றோடொன்று கலந்து உறவாடும் நாடு மொரீசியசு. இக்கலப்புக்களினால் எல்லாருமே பாதிக்கப்பட்டுள்ளனர். சான்றாக ஓர் ஏழைக் குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். வசிக்கும் அறை, வரவேற்பு அறை, என்று சாதாரணமாக இரண்டு அறைகளும், சமையல் அறை ஒன்றும் குளியல்,கக்கூஸ் என்று

## மேற்கு,கிழக்குப் பண்பாடுகள் சங்கமமாகும் நாடு எங்கள் மொரீசியசு

செய்து, பெரும் பொருளீட்டியவர் கிருஷ்ணசாமி சந்நியாசி. இன்னும் இப்படிப்பலர் பல வணிகத்துறைகளில் ஈடுபட்டுச் சிறப்படைந்துள்ளனர். சிறு சிறு வணிகங்களிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். அனால் தமிழர் இன்று ஆட்சியிலிருக்கும் தொழிற் கட்சி சார்பாகப்பல முறை தேர்தல்களில் நின்று வெற்றி பெற்றவர். சிந்தனைச் சிற்பியென எதிர்க்கட்சியாராலும் பாராட்டப்பட்டவர். இவர் காலமாகி இன்று 15 தனியான வசதிகள் வேறு. குறைந்தது நான்கு நாட்காலிகள், ஒரு மேசை, ஒரு கட்டில் (இங்கு பாய் விரித்துத் தரையில் உறங்குவோர் மிக மிக அரிது) மின்சார வசதிகள், வானொலிப் பெட்டி, தொலைக்

### பர்மாத் தமிழர் செய்திச் சிதறல்கள்!

✲ 26. 10. 75 இரங்கூன் இராம கிருஷ்ண மண்டபத்தில் திரு. மணி அவர்கள் தலைமையில் மாபெரும் கூட்டம் ஒன்று நடை பெற்றது இந்த இரங்கல் கூட்டத்தில் இந்தியத் தூதரக முதற் காரியதரிசி திரு. பட்நாகர் கலந்து கொண்டு மறைந்த தலைவர் காமராசர் பணி விதந்துரைத்து உரையாற்றினார். கூட்ட முடிவில் "கிங்பேங்" என்ற ஏழைகள்வாழும் கிராமத்தில் "காமராசர் இலவசக் கல்வி (4ம் பக்கம் பார்க்கவும்)

# திக்கெட்டும் தமிழர் நிலை — தொடர் கட்டுரை

இப் பெருங் சண்டம் மூழ்கிய நிலையை ஆராய, சான் மர்ரே கடலாராய்ச்சிப் படை மாபாயிசு (MABAHISS) என்னும் சிறிய எகிப்திய மரக்கலத்தில் ஏழு மாதம் ஆய்வு நடத்தியது தென்மாவாரியில்! அதன் புதுக் கண்டு பிடிப்புகளை பேரா. இசுரேண்லி காடினெர் (Prof. Stanley Gardiner) விளக்குகையில் ''காண்டுவானு எரிமலை எழுச்சியில், சொல்லப் போனால் தலைகீழாக அமிழ்ந்தன என்று தான் இதிலிருந்து ஒருவர் முடிவு செய்ய முடியும்'' என்று கூறினார் (சான்று இந்தியப்பட விளக்கக் கிழமையிதழ் (Illustrated Weekly of India 29. 7. 1934).

உலக நாகரிகங்களை இது வரை மேலையர் வகுத்துள்ள வரிசை பின்வருமாறு:

மேலையர் தம் மேற்காட்டிய மனப்பாங்கும் கருத்தோட்டமுமே. சிலர் நினைக்கலாம்; ''தமிழர் தம் நிலை பற்றிக் கவலைப்படவோ, ஆராயவோ கருத்துரைக்கவோ, இன்னும் கரிசனமும் அக்கறையும் கொள்ளவோ மேலையருக்கு ஏன் பொறுப்பு இருத்தல் வேண்டும்? தமிழரல்லவா கவனித்து முன்னேறும் வழிகளைக் கண்டறிந்து வெளிப்படுத்து

வரை ஆய்ந்து எழுதியுள்ள இன வரலாற்று நூல்களைப் படித்து அறிந்து நம்பும் தமிழர் எத்தனைபேர்? மாக்சு முல்லர் கூறினார், எழுதினார் என்பதற்காகத் தமிழ் மொழியே சமற்கிரகத்தின் சினை மொழி தான் என்று அடித்துப் பேசும் படித்தறிந்த தமிழர் எத்தனை பேர்.

இவை கிடக்க, இன்றுள்ள உலக நாடுகளில் தமிழ்ச் சொற்களின் புழக்கத்தைக் கீழ் வரும் பட்டியலால் காண்க:—

## உலகின் முதல் நாகரிகம் தமிழர் நாகரிகமே.

நாடு (குமரிக் கண்டத்திற்கு மேலையர் இட்ட பெயர்) நச்சு



எங்கள் தமிழ்த் திரு. அரிமா வளங்கோ (பாரிசு)

(1) எகிப்து நாகரீகம் (2) சுமேரிய நாகரிகம் (3) பாபிலோனிய நாகரிகம் (4) எபிரேய நாகரிகம் (5) சீன நாகரிகம் (6) கிரேக்க நாகரிகம். இவற்றுள் எகிப்திய நாகரிகம் கி. மு. 4,000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும் அதினின்றும் கிளைத்தவையே சுமேரிய, பாபிலோனிய, எபிரேய, சீன கிரேக்க நாகரிகங்களாகும். ஆனால் இவை அனைத்திற்கும் முற்பட்ட நாகரிகம் தமிழரதே ஆகும். மேலையர் ஆரிய அடிப்படையில் தமிழைக் கற்பதாலும். இன்றுள்ள இந்திய அமைப்பில் ஆரியப் பிராமணருக்கு முன்னால் தமிழ் மக்கள்

தல் வேண்டும்? இன்னும் மேலையரையே நம்பிக் கிடந்தால் அவர்களைக் குறை கூறிக் கொண்டே இருந்தால் — நம் தமிழ் இனத்துக்கு என்று விடிவு பிறக்கும்?'' என்று!

சரியாகவோ தவறாகவோ இன்றைய அறிவுலகப் போக்கு அங்கனமன்றோ உள்ளது. வெள்ளைக்காரர் சொல்வதெல்லாம், செய்வதெல்லாம், சிறந்த அறிவியல் பேருண்மைகள், வினைப்பாடுகள் என்னும் குருட்டுத்தனமான கருத்து, தமிழர்களில் இன்னும் படித்

ஆந்திரம்: சிற்றூர் (சித்தூர்) நெல்லூர், குண்டூர், ஓராங்கல்

ஒட்டரம் அல்லது ஒரிசா: கடகம் (Cuttack) வளைமதில் சூழ்ந்த நகரம் வேம்பாய் அல்லது மராட்டியம்: வேளூர், வேளூரகம் (Ellora), வேளாபுரம் (Velapur) வேளகம் (Belgaum) வேள்பட்டி (Belhutti)

குச்சரம்: துவாரகை (துவர் = சிவப்பு = துவரை: செப்புக் கோட்டையுள்ள நகரம்) உத்தரமண்டலம் (உத்தரப் பிரதேசம்) மதுரை; (மதுராபுரி - கண்ணன் பிறந்த ஊர்) பிகார்: பாடலிபுரம் (இது பாதிரிப்புலியூர் என்னும் தமிழ்ப் பெயரின்

## மேலையர், ஆரியர் ஆய்வுகளுக்கு 'ஆமாம்' போடும் நம்மவர் இழிநிலை

உயிரிகளின் காலத்திற்கு (Reptilian Period) உரியது; ஐயமில்லாமல் நச்சுயிர்ப் பூதங்களின் இருப்பிடம் அது; (ஆபிரிக்காவின தென் ஏமன் தீவைச் சேர்ந்த) சொக் கொத்திராவைச் (Socotra) நோக்கிச் செல்லும் 10,000 அடி உயரமுள்ள மலைத் தொடர், தெளிவாக, (இந்தியாவில் ஆச்சுமீரிலுள்ள)

தலை யெடுக்காது தாழ்ந்து கிடக்கும் இழி நிலையாலும் அவர்களால் தமிழ் வரலாற்றையும், தமிழ் நிலத்தின் முது பழமையையும் அறியாமலும், அறிந்து வெளிக்கொணர முடியாமலும் இருந்து வருகிறது. இதன் விளைவால் தமிழ் இனம் உலக அரங்கில் அறியப்

தறிந்த மக்களிடம் கூட இருந்து வருகிறது. நம் தமிழர் சிக்கல்களை விளங்கிக் கொள்வதற்குக் கூட, வெள்ளையர் கூறினாலன்றி நம்புவதற்குப் பெரும்பான்மைத் தமிழர் அணியமாயில்லை. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் இது

வட மொழிப் பெயர்ப்பு. பாதிரி என்னும் பூ பாடலி என்று வடமொழியில் வழங்கும்.

வங்காளம்: (வங்கம் = சப்பல்) காளிக் கோட்டம் (Culcutta) காளி (கோயிலாற் பெற்ற பெயர்), தம்லுக் (தமிழகம்) என்னும் ஊர்ப் பெயர்கள்.

## உலக நாடுகளில் தமிழ்ச் சொற்களின் புழக்கம்

அரவல்லி மலைத் தொடரும் பிறமலைகளுமானவற்றின் தொடர்ச்சியாகவே இருந்தது. இதன் தென் கிழக்கில் ஓர் ஆழ்ந்த பள்ளத்தாக்கு இருக்கிறது. அது தொல்லூழிகளில் சிந்து ஆற்றுப் படையின் தொடர்ச்சியாய் இருந்தது என்பது தேற்றமாகத் தெரிகின்றது. அப்பெரிய நிலப் பரப்பு முழுமையும், சிந்து ஆற்றின் பகுதியும், ஒரு பெரிய

படாமலே இருக்க நேரிடுகின்றது.

இன்று உலக மெங்கும் பரவிக் கலந்துள்ள தமிழர் தம் பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்கள், அவர்களின் மறுமலர்ச்சிக்கும் ஒருங்கிணைப்புக்கும் இடையேயுள்ள தடைக் கற்கள் இன்னோரன்ன நிலைகளை உலக அரங்கில் மற்றெவரும் அறிய முடியாதபடி செய்வதும்

(வளரும்)

உலகெங்கும் பரந்து வாழும்
நம உடன் பிறப்புக்களே உங்களுக்கு

ஈழத்தமிழர்களின் வாழ்த்துக்களும்
அன்பும்

செல்வம் தையலகம்

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


உலகத் தமிழர் குரல்

# பர்மா நாட்டில் நம் தமிழர்கள்

கி. மு. 200 - 300ம் ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் அசோக மன்னன் இந்திய நாட்டில் தென்னகம் இலங்கை ஆகிய நாடுகளுக்கு பௌத்த குருமார்களை அனுப்பிப் பௌத்த மதத்தைப் பரப்பிய நாளில் பர்மியநாட்டிற்கும் ஒரு குழுவினர் வந்தனர். இங்கே வந்த பௌத்த மதத்தோடு காஞ்சிபுரத்திலிருந்து பல்லவ எழுத்து, பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளும் தற்போது தட்டோன் எனப்படும் ''சுவர்ண பூமி'' நாட்டில் பரவியதாக ''பர்மிய கலாச்சார வரலாறு'' என்ற நூல் கூறுகின்றது.

புரோம் நகரத்தின் தெற்குப் பகுதியான ''மோசா'' என்ற கிராமத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொன் தகட்டில் காணப்படும் பௌத்த சாசனம் பல்லவலிபியால் எழுதப்பட்டுள்ளன. அக்காலத்தில் பர்மாவை அரசு புரிந்த மன்னர்களின் பெயர்கள் சூரிய விக்ரமன், சிம்ம விக்ரமன் என்றெல்லாம் சூட்டப்பட்டுள்ளன.

சான் சீத்தா என்ற பர்மிய மன்னன் ''பகான் நகரத்துக்கு வந்த சோழ வேந்தனுக்கு, புத்தம், தர்மம் சங்கம் என்ற முப்பெரும் தத்துவங்களை பொன்னேட்டில் சிவப்பு மையால் எழுதி அறிவித்ததற்கிணங்க சோழ மன்னன் பௌத்த மதத்தைத் தழுவி ஏற்றுக்கொண்டான்'' என்பதாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இவைகளினால் பர்மிய நாட்டுடன் தமிழகம் தொன்றுதொட்டே தொடர்பும் நல்லுறவும் கொண்டு வந்துள்ளது என்பது பெறப்படுகிறது.



எங்கள் தமிழ்த் திரு. ரெ. மாரிமுத்து (பர்மா)

பிற்காலத்தில் கீழ் பர்மா பிரிட்டனின் ஆட்சிப்பிடியில் இருந்தபோது 1852ம் ஆண்டு முதல் இந்தியர்கள் (தமிழர்கள்) பெரும் எண்ணிக்கையில் பர்மாவுக்கு வரத் தொடங்கினர். இவர்கள் பலவகையான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டவராயினும் விவசாயத் துறையிலேயே பெருமளவில் பங்கேற்றனர். அரிசி ஏற்றுமதி மூலம் அந்நியச் செலவணியைப் பெருமளவில் பெற்று வந்த பர்மா நாட்டின் அப்போதைய விளை நிலத்தின் பரப்பு ஆறு இலட்சம் ஏக்கராக இருந்தது. 1876ம் ஆண்டு தமிழக விவசாயத் தொழிலாளர்கள் தீவிரமாகத் தொழிலில் ஈடுபட்டதன் காரணமாக விளை நிலத்தின் பரப்பு 9,8 5,258 ஏக்கராக எல்லாரும் வியக்கத்தக்க அளவில் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதையே

''பர்மா நிலத்தில் பச்சை
வயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே
பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக
ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால்
நாட்டோர் மறுப்பதில்லை''

என்றார் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

(வளரும்)

## பர்மாத் தமிழர்...

(2ம் பக்கத்திலிருந்து)

நிலையம்'' ஒன்று அமைக்கப்பட வேண்டும் என கலை மன்றத் தலைமை நிலையத் தலைவர் திரு. வி சந்திரசேகரன் முன்மொழியத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

❋ அகில பர்மா சிவாஜி கணேசன் கலை மன்ற அவைத் தலைவர் திரு. ஏ. என். கண்ணப்பா தலைமையில், தலைமை நிலையப் பணி மனையில் 3. 10. 75 அன்று தமிழகத் தலைவர் காமராசர் அவர்கள் மறைவுக்காக இரங்கல் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

❋ திரு. ரெ. மாரிமுத்து அவர்களை வெளியீட்டுக் குழுத் தலைவராகக் கொண்டு பர்மாவிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் ''தமிழ் உள்ளம்'' ஏட்டின் பொங்கல் சிறப்பிதழ் வர்ணமலராக மலர்ந்துள்ளது. இதில் தமிழக, சிங்கை, மலேசியா, இலங்கைப் பெரியார்கள் வாழ்த்துக்களும் கட்டுரை, கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

### எமது நன்றி

இம்மாத குரலுக்கு விளம்பரம் பெற்று உதவிய மாவனல்லை திரு. தியாகமணி அவர்களுக்கும் வல்வெட்டித்துறை திரு. செல்வராசா அவர்களுக்கும்

எமது மனங்கனிந்த நன்றி.

வள்ளுவர் நெறியிற்
வையகம் வாழ்க!

மில்க் வைட்
யாழ்ப்பாணம்

இப் பத்திரிகை, கண்டி செட்டி கார்றன்ஸ் 128 6ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் இரா. கனகரத்தினம் அவர்களால், கொழும்பு, 102 / 2, ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள, எம். ஜீ. எம். அச்சகத்தில் அச்சிடப்பட்டு 25. 2. 76ல் வெளியிடப்பட்டது.